# அடியார்க்கு நல்லார் உரை வழி சிலம்பில் இசைக்கருவிகள்

# Adiyarku Nallar Textual Instruments on the Cymbals

***முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ***
உதவிப்பேராசியர், தமிழ்த்துறை
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

**Dr. J. Jeyavanisree**
*Assistant Professor, Department of Tamil*
*Government Arts College*
*Kumbakonam*

## ஆய்வுச் சுருக்கம்

*சிலப்பதிகாரத்தில் இசைக்கருவிகள் இடம் பெற்றுள்ள காதைகளில், இசைக்கருவிகளாக குழற் கருவி, யாழ்க்கருவி, தண்ணுமைக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக்கருவி எனப் பலவகைகளில் இடம்பெற்றுள்ளன. குழல் – துளைக்கருவி; இசை – ஊதிசை; யாழ் – நரம்புக்கருவி; இசை – மீட்டிசை; தண்ணுமை – தோற்கருவி; இசை – கொட்டிகை; கஞ்சம் – உலோகக்கருவி; இசை – தட்டிசை; மிடறு – கண்டக்கருவி; இசை – பாட்டிசை; என்பன வகையில் அடியார்க்கு நல்லார் உரை வழி எடுத்தியம்புவதே இவ்வாய்வுக்குப் பெரிதும் துணையாகிறது.*

## Abstract

*Among the kathayas where musical instruments are placed in Silapathikaram, there are various types of musical instruments such as kulakaruvi, yaffakaruvi, tannumaikaruvi, kanjakaruvi, and midattukaruvi. Hose – drill; Music – Radio; Jaffa – Nerve instrument; Music – Remix; Thannumai – defeating instrument; Music – The Barn; Ganjam – metal tool; Music – Tatisai; Mitaru – instrument of observation; Music – Patisai; In this way, Nallar's textual approach to Adiyar greatly supports this analysis.*

### சிலம்பில் இசைக்கருவிகள் இடம் பெற்றுள்ள காதைகள்

*சிலம்பில் அரங்கேற்றுகாதை, மனையறம் படுத்த காதை, அந்திமாலைச் சிறப்புச்செய் காதை, கானல்வரி, வேனிற்காதை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, அழற்படுகாதை, குன்றக்குரவை, நடுகற்காதை ஆகியவற்றில் இசைக்கருவிப் பற்றிய செய்திகள் பரவிக்கிடக்கின்றன.*

### இசை நூல்கள்

*அடியார்க்கு நல்லார் உரையில் அகத்திய சூத்திரம், ஆசிரியமாலை, திவாகரம், பஞ்சமரபு, மதிவாணன், பஞ்சபாதியம், இசைநுணுக்கம் (சிகண்டியார்), பெருங்குருகு (முதுகுருகு), பெருநாரை (முதுநாரை), பரதம், பிங்கலம், இசை நாடகத்தமிழ் நூல் ஆகிய நூல்களை எடுத்துக்காட்டி விளக்கம் கூறியுள்ளார்.*

*இசைக்கருவிகளின் தன்மையும் சிலப்பதிகாரத்தின் வழி ஆராயப்படுவது இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் இசைநுணுக்கம் மாறாமல் அதன் தன்மை காக்கும்*

### *Ears in which Musical Instruments are Placed in Cymbals*

*There are reports of musical instruments in Silampil Arankarutukatha, Manayaramatta katha, Anthimalai Special shei katha, Kanalvari, Venikkatha, Vedtuvavavari, Aichiyar kuravai, Aalpatdukatha, Kundakuravai and Nadukarkatha.*

*பொருட்டு விவரித்து இருப்பது அடியார்க்கு நல்லாரின் நூற்நுட்பத்தை எடுத்துரைக்கின்றது என்பதும், காக்கப்பட்டு வருவதும் திண்ணம் எனும் முறையில் இவ்வாய்வுக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *இசைநுணுக்கம், மதிவாணன், பெருங்குருகு.*

***Music Texts***

*In Adiyarku Nallar's speech, he expounded on the books Agathiya Sutra, Asiriyamalai, Divakaram, Panchamarapu, Madivanan, Panchapadiyam, Isainunukkam (Sikandiyar),*

*Perunguruku (Mudukuruku), Perunarai (Mudunarai), Bharatam, Pingalam, Music Drama Tamil Text. The nature of musical instruments is explored through Silapathikaram in order to preserve the subtlety of music in this age and for all time.*

***Keywords:*** *Music Texts, Madivanan, Perunguruku*

**Citation**

Jeyavanisree, J. "Adiyarku Nallar Textual Instruments on the Cymbals." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 85–95.

*சிலப்பதிகாரத்தில் இசைக்கருவிகள் இடம்பெற்றுள்ளகாதைகளில், இசைக்கருவிகளாக குழற்கருவி, யாழ்க்கருவி, தண்ணுமைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவியும் எனப் பலவகைகளில் இடம்பெற்றுள்ளன. குழல் - துளைக்கருவி; இசை - ஊதிசை; யாழ் - நரம்புக் கருவி; இசை - மீட்டிசை; தண்ணுமை - தோற்கருவி; இசை - கொட்டிகை; கஞ்சம் - உலோகக் கருவி; இசை - தட்டிசை; மிடறு - கண்டக்கருவி; இசை - பாட்டிசை; என்பன வகையில் அடியார்க்கு நல்லார் உரை வழி எடுத்தியம்புவதே இவ்வாய்வுக்குப் பெரிதும் துணையாகிறது.*

**சிலம்பில் இசைக்கருவிகள் இடம் பெற்றுள்ள காதைகள்**

*சிலம்பில் அரங்கேற்றுகாதை, மனையறம்படுத்த காதை, அந்திமாலைச் சிறப்புச்செய் காதை, கானல்வரி, வேனிற்காதை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, அழற்படுகாதை, குன்றக் குரவை, நடுகற்காதை ஆகியவற்றில் இசைக்கருவிப் பற்றிய செய்திகள் பரவிக்கிடக்கின்றன.*

**இசை நூல்கள்**

*அடியார்க்கு நல்லார் உரையில் அகத்திய சூத்திரம், ஆசிரியமாலை, திவாகரம், பஞ்சமரபு, மதிவாணன், பஞ்சபாதியம், இசைநுணுக்கம் (சிகண்டியார்), பெருங்குருகு (முதுகுருகு), பெருநாரை (முதுநாரை), பரதம், பிங்கலம், இசை நாடகத்தமிழ் நூல் ஆகிய நூல்களை எடுத்துக்காட்டி விளக்கம் கூறியுள்ளார்.*

**குழல்கருவி விளக்கம்**

*இது ஊதுங்குழல் எனப்படும். வங்கியம் என்பது பொதுப்பெயராகும். துளைக் கருவியாகும். வாய்க்காற்றை ஊதித் துளைவழி இசை எழுப்புவதாகும்.*

**வடிவம்**

*பருனையும் நீளமும் உடையது. இலக்கணம் அமைந்த விரல்களுக்கிடையில் விரல்கள் சுழன்று தடவும் துளைகளையும் ஊதுதலையும் உடையது. சுரபேதங்கள் குலையாமல் அளவறுக்கப்பட்ட வடிவம் உடையது. குழல் வடிவம் உடையது.*

**குழல் செய்வதற்குரிய பொருட்கள்**

*ஐந்து வகையில் செய்யப்படுகிறது. மூங்கில், சந்தனம், செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும், வெண்கல உலோகத்தாலும் செய்யப்படும்.*

**உத்தமம்**

*மூங்கிலில் செய்வது உத்தமம். வெண்கலத்தில் செய்வது மத்திமம்;, ஏனையவற்றில் செய்வது அதமம்.*

**குழல் வடிவத்தின் (பிண்டி) இலக்கணம் - மரம் தேர்வு செய்யும் முறை**

*உயர்ந்த மேடான சமதள நிலத்தில் பெருக வளர்ந்து, நாற்றிசை காற்றில் சுழன்று மயங்கி வீசும் நிலத்திலுள்ள மரத்தில் செய்தால் அதில் நாதம் தோன்றாது. காற்று வீசாத நிலத்தில் இளமையும் முதிர்ச்சியும் இல்லாத ஒரு புருடாகாரமான மரத்தில் எடுத்து, அதனை நிழலில் ஆறவிட்டு திருகுதல், பிளத்தல், ஊடுருவல் ஆகியன இல்லை என்பதை அறிந்து, ஓராண்டு சென்றபின் இலக்கண வகையில் குழல் செய்யவேண்டும்.*

**துளையிடுதல்**

*குழலின் நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல், இதில் துளையிடும் இடத்தில் நெல்லரசியில் ஒரு பாதி மரனிறுத்திக் கடைந்து, வெண்கலத்தால் குழல் வாத்தியத்தின் முகப்பு செய்து இடமுகத்தை அடைத்து, வலமுகம் வெளியாக விடப்படும் வகையில் துளையிட வேண்டும்.*

**துளை அளவு**

*நீளம் இருபது விரல் அளவில், ஊதும் முகத்தின் பகுதியில் இரண்டு விரல் நீக்கி, முதல் வாயைவிட்டு, அம்முதல் வாய்க்கு ஏழு அடி அங்குலம் விட்டு, வளைவாயிலும் இரண்டு விரல் நீக்கி, நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டு துளையிடவேண்டும்.*

**குழல் ஊதுதல்**

*குழல் ஊதுமிடத்தில் வளைவாள்ச் சேர்ந்த துளையை மாத்திரை என்று நீகு;கி, முன்னின்ற ஏழனையும் ஏழு விரல் பற்றி ஊதவேண்டும்.*

**ஏழு விரல்கள்**

*இடக்கையில் பெருவிரலையும் சுண்டு விரலையும் நீக்கி மற்ற மூன்று விரலும், வலக்கையில் பெருவிரலான கட்டைவிரல் ஒழித்து நான்கு விரலுமாக ஏழுவிரல்களைப் பயன்படுத்தவேண்டும்.*

**ஏழு துளைகளில் இசை பிறத்தல்**

*ச ரி க ம ப த நி என்ற ஏழு எழுத்தால் இசை பிறக்கும். ஏழு எழுத்தினையும் மாத்திரையளவு படுத்தித் தொழில் செய்ய ஏழிசையும் பிறக்கும்.*

**ஏழிசை எழுத்துகளின் விரிவு**

*ச - சட்சமம், ரி - ரிடபம், க - காந்தாரம், ம - மத்திமம், ப - பஞ்சமம், த - தைவதம், நி - நிடாதம் என்பன. இவ்வேழிசைக்கும் தமிழ்ப்பண் முறையில் ஆதாரச் சொற்கள்: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழாகும்.*

**குழல் வகைகள்**

*ஆம்பல் குழல் - இது வெண்கலத்தால் குமுதம் வடிவாக அணைசு செய்து அதைக் குழலின் ஊது பகுதியில் பொருத்தி ஊதுவது ஆம்பல் குழலாகும்.*

*கொன்றைக் குழல் - கொன்றை மரத்தைத் துருவித் துளைத்து ஊதுவதாகும்.*

*முல்லைக்குழல் - முல்லைக்கொடியை முப்பிரிவாகத் திரித்த வளையைக் குழலின் ஊதுவாய்க் கண் பொருத்தி ஊதுவதாகும். இதனைச் சிலம்பில் ஆய்ச்சியர் குரவைப் பாட்டில்,*

***ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி***
***கொன்றையத் தீங்குழல் கேளாமோ தோழி***
***முல்லையத் தீங்குழல் கேளாமோ தோழி***

*எனக்குறிக்கிறது. கோவலர் ஊதும் இசைப்பாட்டை தமக்கென்று உரிய முறையில் பாணர் ஊதுவர் என நீர்ப்படைக்காதையில் குறிப்பிட்டுள்ளது.*

**கேட்போர் செவிகொள்ள இசைக்கும் முறைகள்**

*இசையாசிரியனின் பாடல் வடிவங்களில் யாழ்ப் பாடலும் குழலிசையும் இயைந்து சேர வாசித்துக் கேட்போர் செவி கொள்ள இசைத்தல் வேண்டும். குழலிடத்துக் கோடிப் பாலைப்பண் வலமுறை மெலிய பாடப்படும். அரசனின் ஆநிரைகளை நீர்த்துறையில் படுக்க வைத்துக் கோவலர் குழல் ஊதுவர்.*

**குழலோனின் தன்மை**

*குழல் ஊதி வாசிப்பவன் குழலோன் என்பர். குழலாசிரியன் குழலிசைக்கும் போது இசை கொள்ளும் எழுத்துகளின் மேல் பண்ணீர்மை நிறுத்திலாகிய சித்திரப் புணர்ப்பும், இசை கொள்ளாத எழுத்தின் மேல் வல்லொற்று வந்தழி மெல்லொற்றுப் போல் நெகிழ்த்துப் புணர்க்கும்.*

**ஏற்றம் இறக்கம்**

*குழலில் பயன்படுத்தும் விரல்களை நன்றாகச் சுழற்றி ஊதுதல், ஊதுதுளையில் ஆள்காட்டி (தர்ச்சனி) விரல் முதலாக விட்டுப் பிடிக்கும் ஆரோகணமுமான ஏற்றமும், சி றுவிரலை கனிட்டன் விட்டுப் பிடித்தலாகிய இறக்கமும் அறிந்திருக்க வேண்டும். இவ்வாறு ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளுதல் நூற்றுமூன்று பண்ணீர்மைகளையும் தந்நிலை குலையாமல் நிரம்பக் காட்டும் வல்லமை பெற்றிருக்கும். அரும்பாலையும் மேற்செம்பாலையும் பண்கள் போல் அல்லாமல் பிற பாலைகளையும் இணைத்து ஊதும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.*

*முழவின் கண்நெறியான முழவின் ஒரு பக்கத்தோலின் நடுவே சிறிதாக வட்டமாக இருக்கும் பகுதியை அறிந்திருக்க வேண்டும். வண்ணம் முதலாகக் காட்டும் பாடலியல் வழக்கெல்லாம் சுவைபட நிறையும் வண்ணம் வாசிக்கவேண்டும். பண்ணிலக்கணம் பதினொன்னையும் வாசிக்கும் வல்லமை, தெய்வப்பாடல் அளவு நிரம்ப நிறுத்தும் வல்லமை, பாடலிடத்துச் சொல் நீர்மையின் எழுத்துகள் சிதையாமல் எழுத்தை எழுத்தாக இசைக்கும் இயல்புகளை இலக்கணமுறைப்படி வாசித்துக் காட்டும் வல்லமை முதலியன குழலாசிரியனுக்குரிய அமைதியாகும்.*

**அரங்கேற்றத்தில் வாசிக்கும் முறைமை**

*மாதவி ஐந்தாம் அகவையில் தொடங்கி ஏழாண்டுகள் ஆடலாசிரியனிடம் ஆடல் பயிற்சி பெற்று, சோழன் கரிகால்வளவனிடம் அவையில் ஆடல் அரங்கேற்றம் செய்தபோது குழலாசிரியன் மேற்காணும் இலக்கணப்படி குழல் ஊதினான்.*

**குழல் பற்றிச் சிலம்பில் இடம் பெறும் சொற்கள்**

*குழல், குழல் கட்டுதல், குழல்களுள் உத்தமம், குழல் செய்வதற்கான மரம், குழல் வாசிக்கும் விரல்கள், குழலிசை, குழலின் பாடல், குழலின் பாணி, குழலின் பிண்டிகை இலக்கணம், குழலிடத்துக் கொடிப்பாலை முதலியனவும், குழலின் வகைகளும் என விவரிக்கப்பட்டுள்ளன.*

**யாழ்க்கருவி விளக்கம்**

*யாழ் - நரம்புக்கருவி. குழல் செய்வதற்குக் கூறப்பட்ட மூங்கில், வெண்கலம் ஆகியன தவிர ஏனைய மரத்துண்டுகளில் வடிவமைக்கப்பட்டு நரம்புகள் கட்டப்பட்ட இசைக்கருவி யாழாகும்.*

**யாழின் உறுப்புகள்**

*பத்தர் - யாழின் குடப்பாகம், கோடு - வளைவான நீண்டபகுதி, ஆணி - இரும்பு முதலியவற்றால் செய்யப்பட்ட ஆணி. நரம்பு - விலங்கிள் நரம்பாகும்.*

**யாழ்க்குற்றம்**

*யாழ் செய்யப்பட்ட மரத்திற்கு வெயில், காற்று, நீர் முதலியவற்றால் ஏற்படும் குறையும், யாழ் நரம்பிறகும் உண்டாகும் குறையும் யாழ்க்குற்றமாகும்.*

**யாழ்வகையும் நரம்பின் எண்ணிக்கையும்**

*பெரியாழ் - 21 நரம்புகள், மகரயாழ் - 19 நரம்புகள், சகோடயாழ் - 14 நரம்புகள், செங்கோட்டியாழ் - 7 நரம்புகள்.*

**இசை பிறத்தல்**

*குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைச் சொற்களால் ச ரி க ம ப த நி என்ற ஏழு எழுத்தாழும் இசை பிறக்கும். ஏழு எழுத்தினையும் மாத்திரையளவு படுத்தித் தொழில் செய்ய ஏழிசையும் பிறக்கும்.*

**யாழில் எட்டு வகை இசை எழுப்புதல்**

1. *பண்ணல் - வலக்கைப் பெருவிரலாலும், சிறுவிரலாலும் இசைத்தல்.*
2. *பரிவட்டணை - வலக்கை இருவிரலால் தழுவி, இடக்கை விரலை இயையச் செய்து இசைத்தல்.*
3. *ஆராய்தல் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசை க்கூறுகளையும் ஒன்றோடு ஒன்று மாற்றி இணைத்து இசைத்தல்.*
4. *தைவரல் - மனமகிழ்ச்சியுடன் தொடையில் பட்டும் படாமலும் யாப்பு நடையின்றி தாளமிட்டு இசைத்தல்.*
5. *செலவு - பாலை, பண், திறம், கூடம் எனும் நால்வகை இடத்தில் பதினோர் ஆடலும் தாளமும் இயல்பும் தொடர்ந்து விளங்க இசைத்தல்.*
6. *பதினோர் ஆடல் - கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, பாவைக்கூத்து, கடையக்கூத்து, குடை, குடம், பேடு, மரக்கால் போன்றவை.*
7. *விளையாட்டு - குரல் முதலிய ஏழுவகையில் இசையெழுப்புதல்.*
8. *கயூழ் - எவ்விடத்திலும் இன்பமும் சுவையும் தோன்ற ஒலித்தலின்றி நடை திரியாமல் நாற்பத்தொன்பது வனப்பும் வண்ணமும் தோன்ற இசைத்தல்.*
9. *குறும்போக்கு - துள்ளற்கண் யாழ்க்குடக்குத் துள்ளும். தள்ளாது உடன் சேர்ந்மு கொள்ள இசைத்தல்.*

**எட்டுவகை இசைக்கரணம்**

1. *வார்தல் - யாழ் நரம்புகளில் சுட்டுவிரலால் செய்யும் தொழில்.*
2. *வடித்தல் - சுட்டுவிரலும், பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும், புறமுமு; ஆராய்தல்.*
3. *உந்தல் - நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல் பட்டதும் வலிமை, மென்மை நிரவிழி பட்டதும் என்று இசைத்தல்.*
4. *உறழ்தல் - நரம்புகளை ஒன்றிடையிட்டும் இரண்டிடை விட்டும் ஆராய்தல். மாற்று நரம்பு இசை.*

5. உருட்டல் - இடக்கை, வலக்கைச் சுட்டுவிரல் நரம்பைத் தானே உருட்டலும், சுட்டுவிரலும், பெருவிரலுடன் பெருவிரல் கூட்டி உருட்டலும் ஆகும்.
6. நெருட்டல் - யாழ் நரம்பைத் திருத்துதல்.
7. அன்னல் - நரம்புகளைச் சேர்த்து எடுத்தல்.
8. பட்டடை - யாழின் இளி நரம்பு அறிதல்.
9. கலந்து வாசித்தல் - பண்ணையும், பண்ணின் திறத்தையும் பாடுபவருடன் கலந்து வாசித்தல்.

**ஆசான் சாதி 4 வகை**

1. அகச்சாதி - காந்தாரம் (ஓர் இராகம்).
2. புறச்சாதி - சிகண்டி (யாழ்த்திறம்)
3. அருகுசாதி - தசாக்கரி (பத்து எழுத்தையுடையது)
4. பெருஞ்சாதி - கந்தகாந்தாரம் (இராகம்).

**செங்கோட்டியாழ் கட்டுதல்**

பல உறுப்புகளுள் தந்திரிகரம், திலவு ஆகிய இவ்விரண்டையும் உறுதியுடன் கட்டுவது. தந்திரிகம் என்பது யாழ் நரம்பு கட்டத் தொடங்குவதற்கு யாழின் முன்பகுதியை விட்டு இருச ஈண் விரல் நீளமாகக் குறுக்காகச் சேர்த்துக் கட்டுதல். திலவு என்பது நரம்புகளை வலிவு பெறக் கட்டும் வார்க்கட்டு.

**பதினான்கு கோவை (தொகுதி)**

யாழ் நரம்புகளைக் கலந்து வாசித்தல், ஏழிசைக் கூறுகளை இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை என்னும் முறையில் ஏழு நரம்புபளைக் கட்டி பின்னர் இவை கலந்து வருமாறு வாசித்தல்.

**யாழாசிரியன் அமைதி**

பாடல் இயல்பு ஒத்தமைந்த ஏழு பாலையினையும் இணை நரம்பாகத் தொகுத்து நிறுத்திக் காட்டுதல். யாழ்க்கோல் இனிது செப்பம் உடையதாகச் செய்து பெண்களுக்குரிய தாளம் அமைத்தல், பாடல்களின் இயல்பு ஒத்தமைந்த ஏழு பாலையினையும் இணை நரம்புடன் தொகுத்து நிறுத்திக் காட்டுதல், குரல் முதலான ஏழிசைக் கூறுகளையும் ஒன்றோடு ஒன்று இணைத்துக் காட்டுதல் முதலிய திறன் உடையவராக இருக்கவேண்டும். ஆடல் முதலியன காட்டுங்கால் ஆடலோன், இசையோன், இயற்புலவன், தண்ணுமையோன், குழலோன் ஆகியோருடன் கூடி யாழ்க்கருவி இசைப்பது யாழாசிரியன் அமைதியாகும்.

**யாழ் வாசிக்கும் முறை**

யாழ் நரம்புகளின் மேல் வலக்கைப் பெருவிரல் வைத்தும், ஊனைய நான்கு விரல்களைக் கோட்டின் மேல் வைத்தும், இடக்கை நான்கு விரல்களை மாடகத்தின் மேல் வைத்தும் வாசிப்பதாகும். கோடு, மாடகம் என்பது யாழின் உறுப்பாகும்.

**வாரப்பாடல்களுக்கு யாழிசைத்தல்**

வாரப்பாடல் என்பது தெய்வப்பாடல். இஃது இருவகைப்படும். ஓரொற்று வாரம், ஈரொற்று வாரம். தேசிய மடந்தை என்போர் வாரப்பாடல் பாடுவர். அப்பாடல்களைத் தழுவி

*யாழ் வாசிப்பர். தோரிய மடந்தை என்போர் ஆடி முதிர்ந்தவர்கள். இவர்கள் ஆடல் மகளிர் கால் ஆட்டத்திற்கு ஏற்ப தாளம் அமைத்து வாரப்பாடல் பாடுவர்.*

**யாழைப் பகை நரம்பு பட இசைத்தல்**

*“உருப்பசி தேவகணிகையாய் வாழ்ந்தபோது நாரதனை மதிக்கவில்லை. நாரதன் யாழைப் பகைநரம்பு பட வாசித்து அவளுக்குச் சாபமிட்டான்” என கூறப்படுகிறது.*

**யாழ் வாசிப்போர் பெயர்கள்**

*யாழ்ப்பாணர், யாழ்புலவன்.*

**யாழிசையின் பயன்**

*மன்னனின் உள்ளத்தில் விரும்பச் செய்வது. யாழிசைப் பிறவா இசையே என்கோ என்று கோவலன் கண்ணகியைப் பாராட்டுகையில் இனிய இசையுடைய யாழின் பிறவாத இனிய இசையை இயற்கையிலேயே கொண்டவள் என்றான்.*

**யாழ் அரவம்**

*பலவகை பூக்கள் நிறைந்த மரங்களில் அமர்ந்து வண்டுகள் யாழின் ஒலி போலப் பாடும்.*

**யாழ் பற்றிச் சிலம்பில் இடம் பெறும் சொற்கள்**

*யாழ், யாழ்க்கருவி, யாழ்க்குற்றம், யாழ்க்கோடு, யாழ்க்கோவை, யாழ் நான்கிற்குரிய நரம்பின் தொகை, யாழ்ப்பாட்டு, யாழ்ப்பாணர், யாழ்ப்புலவர், யாழ் வாசிக்கும் முறை, மொழி, யாழின் பயன், யாழிடம் நான்கு, யாழிடம் பிறவா இசை, யாழின் கிளவி, யாழின் தொகுதி, யாழினிட்ட பாட்டு, யாழினிடம் அரும்பாலை முதலியன. இடமுறை மெலியத் தோன்றல், யாழுறுப்பு 59, யாழைத் திருத்தல், யாழ்ப்பகை நரம்பு பட இசைத்தல் என விளக்கப்பட்டுள்ளன.*

**தண்ணுமைக்கருவி**

*தண்ணுமைக்கருவி விளக்கம் - தோலால் கட்டப்பட்டு இசைக்கப்படுவதால் தோற்கருவி என்பர்.*

1. *பொதுப்பெயர் - மத்தளம், முழவு என்பர்.*
2. *வேறுபெயர்கள் - முருடு, பத்தல்.*
3. *உத்தமம் - மத்தளம், தண்ணுமை, உடுக்கை, சல்லிகை.*
4. *மத்திமமான மத்தளம் - தக்கை, தரணிச்சம்.*
5. *முழவு இசைத்தல் - மத்தளத்தின் வழியே முழவு இசைத்தல்.*
6. *கருவிகள் இசைக்கும் வரிசைமுறை - மிடற்று வழி யாழும், யாழ்வழி மத்தளமும், மத்தளத்தின் வழி குடமுழவும் இசைக்கும் முழவோடு கூடி நின்று இசைப்பது.*
7. *ஆமத்திரிகை - தோற்கருவிகள் அனைத்தும் சேர்த்து ஒலிப்பது. ஒலிப்பதில் பருத்தும் நிழலும் போல ஒன்றாக ஒலிக்கும்.*
8. *தண்ணுமை - தாழ்ந்த குரலோசை உடையது.*
9. *தடாரி - ஆமை வயிறு போல் இருக்கும் தோற்கருவி.*

10. தொழிலின் கூறு - இருவகைப்படும். வேத்தியல், பொதுவியல் என்பன.
11. மத்தளம் - இது மந்தமான ஓசையுடையது. மத்தள ஓசையானது இசையோடான கருவிகளுக்கு எல்லாம் தளமாதலால் மத்தளம் எனவாயிற்று. முழவுகளெல்லாம் இதனுள் பிறந்தவையாகும்.
12. தண்ணுமையின் சுரம் - பாடுகின்ற பண்களுக்கு ஓசை குறைபடாமல் அந்தப் பண்ணுக்கு அயலோசை கலக்காமல் சுவைபடவும், பாட்டியல் வழக்கெல்லாம் நிரம்பக் காட்டியும் இசைப்பதாகும்.
13. கொட்டுக்கருவி - தோற்கருவிக்கு எல்லாம் கொட்டுக் கருவிகளாகும். கையாலும், சிறுகுச்சியாலும் தோல் மீது அடித்து ஓசை எழுப்பப்படும்.
14. அந்தரக்கொட்டு - முகம், ஒத்து என்பர்.
15. குயிலுவர் - இடக்கை முதலிய கருவிகளைக் கொட்டுவோர் குயிலுவர் என்பர்.

**முழவின் ஏழு வகைகள்**

1. அகமுழவு - உத்தமமான மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா என்பன.
2. அகப்புறமுழவு - மத்திமமான தண்ணுமை, தக்கை, கருணிச்சம் முதலியன.
3. புறமுழவு - அதமக்கருவியான கணப்பறை.
4. புறப்புற முழவு - நெய்தற்பறை.
5. பண்ணமை முழவு - முரசு, நிசானம், துடுமை, திமிலை எனும் வீரமுழவு.
6. நாள்முழவு - நாட்பறை.
7. காலை முழவு - துடி.
8. சல்லிகை - சல் எனும் ஓசையுடையது. இடையில் வைக்கும் கருவி.
9. ஆவஞ்சி - ஆவின் வஞ்சித் தோலைப் போர்த்துவதாகும். குடுக்கையால் அடைப்பதால் குடுக்கை எனவும் வழங்குவர். இடக்கை - கரடிக் கத்தும் ஓசையுடையது.
10. உடுக்கை - கடைசியல் கொட்டும் கடைக்கருவி.

**தண்ணுமைக்கருவி வகைகள் 31**

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசானம், துடுமை, சிறுபறை, அடக்கம், தருணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிசைப்பறை, பெரும்பறை என்பன. அமைதி - எல்லாக் கூத்தும், பாட்டும், இசையும் வடஎழுத்து ஒரீஇ நீக்கி வந்த எழுத்தாலே கட்டப்பட்ட ஓசைக் கட்டளைக் கூறுபாடுகளும், எல்லாப்பண்புகளும், இருவகைத் தாளங்களும், எழுவகைத் தூக்குகளும் முடங்களும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் சொல்லால் உணர்ந்து ஓர் உருவை இரட்டித்து நெகிழாதவாறு நிரம்ப நிறுத்தவும். அவ்விடத்தில் பெறும் இரட்டிப்பை ஒப்பாக நிற்க நிறுத்தி கழியுமாறு கழிக்க வல்லவனாகவும், உருக்களில் யாழ்ப்பாடலும், குழலின் பாடலும் கண்டப்பாடலும் இயைந்து கேடபவர் செவிக்கு சேரவாசிப்பதும், மற்றைக் கருவிகளின் குறை நிரப்பவும், அக்கருவிகளின் மிகுதி அடக்குவதும், ஆக்கவும், அடக்கவும் இசையின் துளை தோன்றாதவாறு அழகுபடச் செய்து காட்டுவதும் அரிய தொழிலினையும் ஆசிரியன் பெற்றிருத்தல் வேண்டும்.

**சிலம்பில் இடம் பெறும் சொற்கள், தொடர்கள்**

*தண்ணுமை, தோற்கருவி, முழவு, குடமுழா, தடாரி, தண்ணுமைத் தொழில் கூறு, தண்ணுமைக் கருவி ஆசிரியன், உத்தமத் தோற்கருவி, மத்திமமான கருவி, முழவம், முழவு, ஏழுவகை என்னும் வகையில் விரிக்கப்பட்டுள்ளன.*

**கஞ்சக்கருவி - விளக்கம்**

1. *கஞ்சம் - வெண்கல உலோகக்கருவி. வெண்கலத்தால் செய்யப்பட்ட தாளம் என ஆகுபெயராக வந்துள்ளது.*
2. *கஞ்சதானம் - பாண்டில், பாணி எனப்படும்.*
3. *கஞ்சக்காரர் - வெண்கலம் விற்கும் கன்னார்.*
4. *தொழிலர் - வெண்கலத்தாளம் செய்வோர்.*
5. *தாளவகை - பஞ்சதாளம், ஏகதாளம், பார்வதிலோசனம், ஆறன் மட்டம், எட்டன் மட்டம், தாளஒரியல், தனிநிலை, ஒன்றன்பாணி, என் கூத்துப்பாணி, முதல் நடை வாரம் என்பன.*
6. *தாளத்தின் வழிவருபவை - செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிவு தூக்கு, கோவில் தூக்கு, நிவப்புத்தூக்கு, கழால் தூக்கு, நெடுந்தூக்கு என ஏழு தூக்காகும்.*

**மாத்திரைப் பெயர்களும் மாத்திரை அளவு வடிவமும் தொழிலும்**

1. *கொட்டு - அரை மாத்திரை; வடிவம் க - அமுக்குதல்.*
2. *அசை - ஒரு மாத்திரை; வடிவம் எ - தாக்கி எழுதல்.*
3. *தூக்கு - இரண்டு மாத்திரை; வடிவம் உ- தாக்கித் தூக்குதல்.*
4. *அளவு - மூன்று மாத்திரை; வடிவம் ஃ - தாக்கின ஓசை 3 மாத்திரை அளவு வருதல்.*
5. *தாளவகைகள் 3 - பாணி, தூக்கு, சீர்.*

**இருவகைக் கூத்திற்குரிய தாளங்களும் அளவும்**

1. *புறக்கூத்துத் தாளங்கள் - ஏகதாளம், அரை மாத்திரை, பார்வதிலோசனதாளம், 16 மாத்திரை.*
2. *அகக்கூத்துத் தாளங்கள் - ஆறன், எட்டன் மட்டம், தாள ஒரியல், தனிநிலை ஒரியல், ஒன்றன் பாணி, எண் கூத்துப்பாணி, முதல் நடைவாரம் முதலியன.*
3. *தாளத்திற்குரிய மிதித்தாடல் - துவாராபதியில் மாயவன் கோவலரின் சிறுமியர்களின் கை வளையல்கள் ஒலிக்கின்ற தாளத்திற்கு ஏற்ப கால் மிதித்திட்டுக் குரவைக் கூத்தாடினான். தாள அறுதி அறிதல் - ஆடுபவர் வேத்தியல், பொதுவியல் என்னும் இருவகைக் கூத்திற்குரிய தாள முடிவும் வரையறையும் அறிந்து ஆடவேண்டும்.*

**தாள அறுதியுடைய நரம்பு**

1. *தாளக்கிரியை - இசைப்பாக்கள் ஒன்பது வகைப்படும். சுத்தம், சானகம், தமிழ் எனும் சாதி ஓசைகள் மூன்றுடனும் தாளம் தட்டி செய்கைகளுடன் பொருத்தியிருத்தல்.*
2. *தாள ஒற்றறுப்பைக் காத்தல் - நப்பின்னையின் தாள ஒற்றறுப்பை முடிவு, வரையறையைக் காக்கும் நாரதர் சிக்கை என்னும் அங்கத்தை ஆராயும் முதல் நரம்பை உருவி வாசித்தார்.*
3. *தடாரம் - இரண்டு ஒத்துடைய தாளம்.*
4. *அவதாளம் - ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வருவது.*

**தாளம் பற்றிச் சிலம்பில் இடம் பெறும் சொற்கள்**

*கஞ்சம், கஞ்சதாளம், கஞ்சகாரர், கஞ்சத் தொழிலர், தூளம், தாளம் நாற்பத்தொன்று. தாளம் நான்கு வகை, தாளம் மூவகை, தாள அறுதி, தாள இயல்பு, தாள உறுப்பு, ஒரியல், தாள ஒற்றறுப்பு, தாளக் கிரியை, தாளக்கூறுபாடு, தாளங்களின் வழி வந்த தூக்கு, தாளத்திற்கு ஒப்ப ஆடல், தாளத்திற்கு ஒக்க மிதித்தல், தாளநிலை, தடாரம், அவதாளம், சச்சுபுடம், பஞ்ச தாளம், பார்வதிலோசன தாளம், ஆறன் மட்டம், எட்டன் மட்டம், தனிநிலை ஒரியல், ஒன்றன் பாணி, எண் கூத்தப்பாணி, முதல் நடைவாரம், கொட்டு, அசை, தூக்கு, அளவு, பாணி, சீர், மாத்திரை, தாள ஒத்து என இடம்பெற்றுள்ளன.*

**மிடற்றுக்கருவி விளக்கம்**

*மிடறு - கண்டம். கழுத்துப்பகுதியில் ஒலி எழுப்பும் கண்ட உறுப்பு. சரீரவீனை எனப்படும். கண்டத்தால் வாய்ப்பாட்டு பாடுவதாகும். மிடற்றுப்பாடலுக்குப் பின் யாழ் இசைக்கப்படும்.*

*மேற்கண்ட இசைக்கருவிகளின் தன்மையும் சிலப்பதிகாரத்தின் வழி ஆராயப்படுவது இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் இசைநுணுக்கம் மாறாமல் அதன் தன்மை காக்கும் பொருட்டு விவரித்து இருப்பது அடியார்க்கு நல்லாரின் நூற்நுட்பத்தை எடுத்துரைக்கின்றது என்பதும், காக்கப்பட்டு வருவதும் திண்ணம்.*